ஸ்ரீ

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

திருக்குடந்தை மஹாதேஸிகன்

அருளிச்செய்த

திருவாராதனக்ரமம்

உ. வே. மேல்பாக்கம்

ஸ்ரீரங்கநாத தாதாசாரியரால்

எழுதப்பட்டு,

சென்னை

பட்டாபிராமன் கம்பேனியாரால்

…ளியிட்டது.

…935 [விலை அணா 3

Q22:417
N35

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஸிகாயநம:

ஸ்ரீமதே ஸ்ரீகோபால தாதார்ய மஹா தேஸிகாயநம:

திருக்குடந்தை மஹாதேஸிகன்

அருளிச்செய்த

திருவாராதனக்ரமம்

இஃது

ஏரிம்மடி திருமலை லக்ஷ்மீகுமார

கோடிகன்னிகாதானம்,

ராய குரு

மேல்பாக்கம் ஆராவமுது தாதாசாரியார் ஜேஷ்டகுமாரர்

ஸ்ரீரங்கநாத தாதாசாரியரால்

தமிழில் எழுதப்பட்டது.

(மூன்றும் பதிப்பு)

பட்டாபிராமன் கம்பெனியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை

காபிரைட்] 1935 [விலை அணா 3

காபிரைட்—1928ஞு பட்டாபிராமன் கம்பெனிக்கு காபிரைட்டுக்கு உரியதான இப்புத்தகம் இந்தியன் காப்பிரைட் பிரகாரம் காக்கப்பட்டிருக்கிறது.

இதிலுள்ள விஷயங்களைக் காபிசெய்வார்களாயின் அது காபிரைட்டை உல்லங்கனஞ் செய்ததேயாகும்.

ஸ்ரீ

ஸ்ரீமத் ப்ரணதார்த்திஹரவரத பரப்பிரம்மணே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாயநம:

ஸ்ரீமதே ஸ்ரீகோபால தாதார்ய மஹா தேஶிகாயநம:

திருவாராதன க்ரமம்

ஸ்ரீமத் கோபால தாததேஶிகனுடைய கடாக்ஷ விஶேஷத்தினால்:—

பரமைகாந்திகள் செய்யவேண்டிய பகவதாராதனக்கிரமத்தை லௌகிகர்களும் சுலபமாய் அனுஷ்டிக்க வேண்டியதற்காக தமிழில் எளிய நடையாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளப்படுகிறது. இவ்வாராதனக் கிரமத்தை வடமொழியில் பலர் செய்தருளியிருப்பதையேதான் தென்மொழியில் எழுதப்படுகிறதேயொழிய நூதனமாக விஞ்ஞாபனம் ஒன்றும் செய்துகொள்ளப்படவில்லை.

பிரதமத்தில் ஆராதனத்துக்கு வேண்டிய கருவிகளைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டியது முக்யமாகையால் அதைப்பற்றி ஞ்யாபிக்கிறதாவது.

தினத்தில் 5-ல், 2-வது பாகத்தில் ஸங்கல்ப பூர்வமாக ஸாத்விகத்தியாகஞ் செய்து ஆராதனத்துக்

குரிய தர்ப்பம், துளசி, புஷ்பம், சந்தனம் முதலிய வைகளைச் சேகரிக்கவேண்டும்.

பரிசுத்தமான விடங்களில் பூர்வாசாரியர்கள் ஒப்புக் கொள்ளப்பட்டதும், நல்ல வாசனையோடு கூடியதும், அழகியதுமான புஷ்பங்களைச் சேர்க்கவேண்டும். தன்னால் வைக்கப்பட்ட தோட்டத்திலுள்ளவை உத்தமம். வனத்தில் ஸ்வேச்சையாய் உண்டானவைகள் மத்யமம். கிரயத்துக்கு வாங்குவது அதமம். யாசித்தும் திருடியும் கொண்டுவரும் புஷ்பாதிகள் அதமாதமம். வெளுத்த புஷ்பம் ஸாத்விகமென்றும், சிவந்த நிறமுள்ளது ராஜஸமென்றும், கறுத்த நிறமுள்ளது தாமஸமென்றும் சொல்லப்படும். வாடிப்போனதும், மூளியானதும், காய் அரும்புகளும், பழமையானவைகளும் உபயோகப்படுத்தியதிலிருந்து மிகுதியும்,முகரப்பட்டதும், புழு முதலியவை யுள்ளதும், அசுத்தமான விடத்தில் உற்பத்தியானவைகளும் உபயோகிக்கத்தக்கதன்று. கிருகங்களில் அலரி புஷ்பத்தை அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தக்கூடாது. கிரகிக்கும் புஷ்பாதிகளை *"வீர்யாயஅஸ்திராயபட்" என்று அஸ்திர மந்திரத்தினால் கிரகிக்க வேண்டும். உலகத்தில் உற்பத்தியாகும் தாமரை புஷ்பம் முதலியவைகள் இரண்டுநாளுக்கு மேற்பட்டவைகள் ப்ரக்ஷிப்தமெனப்படும். நாயுருவி, துளசி, பில்வம், அரசு, பச்சிலை, கிருஷ்ண துளசி வாங்கி இவைகளின் இலைகளை கிரகிக்க வேண்டும். வேர்களில் விலாமுச்சி, தேவதாரு, அகில் சந்தனம் இவைகள்சேர்ந்த தூபம் உப

* (கட்டைவிரலும் ஆள்காட்டிவிரலும் சேர்த்து சிட்டிக்கை போடுவது அஸ்திரமந்திரம்.)

யோகிக்கவேண்டும். சந்தனத்தில் பிராணிகளின் அவயவ ஸம்பந்தமான நல்ல வாசனையுள்ள கஸ்தூரி கோரோசனை சேர்க்கலாம். செந்தாமரை செங்கழு நீர் தவிர சிவந்த நிறமுள்ள புஷ்பங்கள் உபயோகிக்கக் கூடாது. இப்படி திரவியங்களை ஸம்பாதிக்குமிடத்தில் வியபிசாரீபதிதன், நபும்ஸகன், பகவத் வேஷி இவர்களிடமிருந்து எந்த ஸமயத்திலும் வாங்கி உபயோகிக்கக் கூடாது. எந்த வீட்டில் பகவதாராதன மில்லையோ அந்த வீட்டிலிருந்தும் ஒன்றும் கிரகிக்கக்கூடாது. ஹுங்காரத்தைச் செய்து தர்ப்பங்களை தடியாலடித்து விட்டு "விரிஞ்சேந ஸஹோத்பந் பரமேஷ்டி, பரிக்ருக நுதஸர்வாணிபாபாநி தர்ப்பஸ்வஸ்தி கரோபவ" என்கிற மந்திரத்தைச்சொல்லி தர்ப்பங்களை கிரகிக்கவேண்டும். "துளஸ்யமிருத ஜன்மாஸி ஸதாத்வம் கேசவப்ரியே கேசவார்த்தம் லுநாமித்வாம் வரதா பவஸோபனே, மோக்ஷைக ஹேதோ தரணிப்ரஸூதே விஷ்ணோஸ் ஸமஸதஸ்ய குரோ:ப்ரீயேதே ஆராதனார்த்தம் புருஷோத்தமஸ்ய லுனுமிபத்ரம் துளஸிக்ஷமஸ்வ, ப்ரஸீத மமதேவேஸப்ரஸீத ஹரிவல்லபே, க்ஷீரோத மதனோத்பூத துளஸித்வம் ப்ரஸீத்மே" என்கிற சுலோகங்களைச் சொல்லி நாலு ஆறு இலைகளுள்ளதும் துளிருமுள்ளதாக ஒவ்வொரு கொத்தாகக் கிரகிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை, மன்வாதி, யுகாதி தினங்கள், பிற்பகல், இரவு, இரண்டுஸந்திகள், மாசப்ரவேசம், அமாவாஸ்யை, பௌர்ணமி, துவாதசி இத்தினங்களில் கிரகிக்கலாகாது. அப்படி கிரகிப்பதால் பகவானுடைய சிரசைக் கிள்ளிய

தற்கு ஒப்பாகும். அப்படிக்கு நேரும் ஸமயங்களில் பூர்வதினமே சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். ஸாத்விக தியாகமும் செய்யவேண்டும்.

திருவாராதன க்ரமம்

நன்றாக கை கால்களை சுத்தி செய்துக்கொண்டு இரண்டுதரம் ஆசமனம் செய்து பரிசுத்த முள்ளதும் சப்தமில்லாமலும் ஏகாந்தமாயுமுள்ள ஓரிடத்தில் தனக்கு இடத்தை ஏற்படுத்திக்கொண்டு * சோஷண தாஹந ப்லாவனங்களினால் அந்தப் பூமியை சுத்திசெய்து குருபரம்பரையை முன்னிட்டு பகவானைத் தியானம் செய்யவேண்டும். அந்தப் பகவானை உபாயமாகவும் அனிஷ்டங்களைப் போக்கடிப்பவனாகவும் அவனுடைய ஸ்வரூபரூப குண விபூதிகள் முதலிய விவரங்களை யெல்லாம் விஸ்தாரமாய் அனுஸந்தித்து (அகில ஹேயப்ரத்யனீக,) என்கிற கத்யத்தினால் சரணமடையவேண்டும். இப்படி சரணமடைவதில் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பதைப் போலத் தியானம் செய்து கொண்டிருக்கவேண்டும்.

---

* **சோஷணம்** என்பது வட்டில்களை வாயுவினால் உலர்த்துவது. **தாஹனம்** என்பது அக்கினியால் கொளுத்துவது. **ப்லாவனம்** என்பது அமிருதத்தாலே மறுபடியும் உத்க்ருஷ்டபாத்திரமாக வரவழைத்தலாம். **ஸுரபி முத்திரை** என்பது இரண்டு ஹஸ்தங்களையும் மடக்கி நடுவிரலும் ஆள்காட்டி விரலும் சுண்டு விரலும் பவித்ர விரலும் ஆக-8 விரல்களினால் பசுவின் முலைக்காம்புபோல் வெளியில்காட்டி வட்டில்கள் மேலும் பகவானுக்கு உபயோகப்படும் எல்லா வஸ்துக்கள் பேரிலும் ஆங்காங்கு சொல்லப்படும் சுரபி முத்திரை யென்கிற ஸ்தலங்களிலும்காட்டி பரிசுத்தம் செய்யவும்.

சக்தி யில்லாவிட்டால் நியாஸதசகத்தை அனுஸந்திக்கவேண்டும். அதற்கும் சக்தி யில்லாவிட்டால் "நின்னருளாங் கதியன்றி மற்றொன்றில்லேன், நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன் உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன், உன்சரணே சரணென்னுந் துணிவுபூண்டேன், மன்னிருளாய் நின்ற நிலையெமக்குதீர்த்து, வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேனுன்னை, இன்னருளாலினி யெமக்கோர் பரமேற்றாமல், என் திருமாலடைக்கலங்கொள் என்னை நீயே" என்கிற பாசுரத்தையாவது அனுஸந்திக்க வேண்டும்.

தன் ஆராதனமான பகவத் ஸன்னிதியில் நுழைந்து தூரத்திலேயே ப்ரணாமங்களைச் செய்து துவாரபாலகர்களைச் சேவித்து அனுமதி பெற்றுக் கொண்டு பகவானுடைய ஸமீபம் சென்று,

"கௌஸல்யா ஸுப்ரஜாராம பூர்வாஸந்த்யாப்ரவர்த்ததே, உத்திஷ்டநரஸார்தூல கர்த்தவ்யம்தைவமாஹ்நிகம், வீரஸௌம்ய விபுத்தஸ்வகௌஸல்யாநந்தவர்த்தன, ஜகத்திஸர்வம் ஸ்வபிதித்வயிஸுப்தே நராதிப, யாமின்யுபைதி யதுநாத விமுஞ்சநித்ராம் உன்மேஷ மிருச்சதிதவோன் மிஷிதேந விஸ்வம்-ஜாதஸ்வயம்கலுஜகத்திதமேவகர்த்தும் தர்மப்ரவர்த்தின தியாதரணீதலேஸ்மின்" "ஸுகாயஸுப்ராதமிதம்தவாஸ்து ஜகத்பதேஜாக்ரஹி நந்தஸூனோ, அம்போஜ மந்தஸ்மய மஞ்ஜுதாரலோலம்பமுன் மீலது லோசனந்தே" என்றும், "நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய" என்கிற பாசுரத்தையும் அநுஸந்தித்து

* திருமணி ஸேவித்து திருக்காப்பு நீக்கவேண்டும். பிறகு ஏதேனுமொரு ஆஸனத்தை அவலம்பித்து பகவானுடைய வலது பக்கத்தில் உட்கார்ந்து மூன்று பிராணாயாமம் செய்து ஸங்கல்பித்துக்கொண்டு ஸாத்விக தியாகமும் செய்யவேண்டும். அதன் விபரம்: “பகவானேவஸ்வ நியாவம்ய ஸ்வரூபஸ்திதி ப்ரவிருத்தி ஸ்வஶேஷதைக ரஸேநானேநாத்மனு ஸ்வகீயை ச்ச தேஹேந்திரியாந்த: கரணை: ஸ்வகீய கல்யாணதம த்ரவியமயான் ஔபசாரிக ஸாம்ஸ்பரிசகாப்யவஹாரிகாதிஸமஸ்த போகாநதி ப்ரபூதாநதி ப்ரியதமானதி ஸமக்ரான் அத்யந்தம் பக்திக்ருதானகிலபரிஜனபரிச்சதான்விதாய ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ ப்திபாதயிதும் உபக்ரமதே” என்று சொல்லியபிறகு பூதசுத்தி செய்யவேண்டும். அதாவது-பஞ்சோபநிஷன் மந்திரங்களான ஸம்ஹாரஸ்ருஷ்டிக் கிராமத்தில் நியாஸம் செய்யவேண்டியது. “ஓம் லாம் நம: பராயஸர்வாத்மனே நம: என்று பாதங்களில் கைகளைவைத்து ப்ரித்வீம் கந்ததன்மாத்ரே விலாபயாமி-கந்த தன்மாத்ரம் அப்ஸு விலாபயாமீ என்றும், ஓம் வாம் நம: பராய நிவ்ருத்யாத்மனே நம: என்று குஹ்யத்தில் வைத்து அப: ரஸ தன்மாத்ரே விஸ்பயாமி-ரஸ தன்மாத்ரம் தேஜஸி விலாபயாமீ என்றும், ஓம் ராம் நம: பராய ஸர்வாத்மனே நம: என்று மார்பில் (ஹ்ருதயத்தில்) வைத்து தேஜ: ரூபதன்மாத்ரே விலாபயாமி, ரூப தன்மாத்ரம் வாயௌ விலாபயாமீ என்றும், ஓம் யாம் நம: பராய

* திருக்காப்பு நீக்குதல், ஸ்நானம் செய்வித்தல், தூபம் தீபம் ஸமர்ப்பித்தல், நிவேதனம் செய்வித்தல், கற்பூர ஆர்த்தி செய்தல் இக்காலங்களில் திருமணி ஸேவிக்க வேண்டும்.

புருஷாத்மனேநம: என்று மூக்கில்வைத்து வாயும் ஸ்பர்ஶதன்மாத்ரே விலாபயாமி ஸ்பர்சதன்மாத்ரம் ஆகாஶேவிலாபயாமி என்றும், ஓம் ஷௌம்நம: பராய பரமேஷ்டியாத்மனே நம: என்று சிரஸில் வைத்து ஆகாசம் ஶப்ததன்மாத்ரே விலாபயாமீ, சப்ததன்மாத்ரம் இந்த்ரியாணிசாஹங்காரே விலாபயாமீ, அஹங்காரம் மஹதிவிலாபயாமீ, மஹாந்தம் பிரகிருதௌ விலாபயாமீ, ப்ரகிருதிம்தமஸி விலாபயாமீ, தம: ஸஜீவம் பரமாத்மன்யேகீ பாவயாமீ என்றும் ஸம்ஹார கிரமத்தை அனுஸந்திக்கவேண்டும். பிறகு ஒரு பிராணயாமம்செய்து வலது கையினுல் தொப்புளில் மூலமந்திரத்தினுல் நியாஸம் செய்து (மந்திரோத்பூத சண்டவாய்வாப்யாயித நாபிதேஶஸ்தவா யுஞசரீரம் அந்தர் பஹிச்சதத்வக்கிரமேண ஶோஷயாமி) என்று அனுஸந்தித்து ஶரீரம் முழுதும் உலர்த்தப்பட்டதாக தியானித்து மறுபடியுமொரு பிராணயாமம் செய்து மூலமந்திரத்தினுல் ஹிருதயத்தில் (மார்பில்) நியாஸம் செய்து "மந்திரோத்பூத சக்ராக்னி ஜ்வாலோப ப்ரம்ஹித ஜாடராக்னிஞ தத்தத்ஸமஷ்டி ப்ரலீன ஸர்வதத்வ ஸர்வகில்பிஷ ஸர்வாக்யான தத்வாஸனம் சரீரம் தாஹயாமி" என்று அனுஸந்தித்து ஶரீரம் முழுதும் கொளுத்தப் பட்டதாக தியானம்செய்து பகவானுடைய வலது திருவடியின் கட்டை விரலின்கீழ் தன்னுடைய ஜீவாத்மாவைச் சேர்த்துவிட்டதாகத் தியானிக்கவேண்டும். மறுபடியும் ஒரு பிராணயாமம் செய்து பகவதனுக்ரகத்தினுல் பகவத்கைங்கரியம் செய்வதற்கு யோக்யதை யடைந்தவனுக தியா

ணம்செய்து அந்தப் பகவானுடைய இடது திருவடியி லிருந்து ஆத்மா தனித்து வந்ததாகத் தியானித்து அந்தத் திருவடி பெருவிரலின் கீழேயிருக்கிற தாகவும் அந்தக் கட்டைவிரலினின்று பெருகிவரும் அமிருதமயமான ஜலத்தினுல் தன்னை பலம்பப் பட்டதாகவும் அந்த அம்ருதமயமான ஜலத்தினுல் எல்லா கைங்கரியங்களையும் செய்யக்கூடிய யோக்யதை யுடைய சரீரத்தை யடைந்ததாகவும் தியானித்து, அந்தச் சரீரத்தில் பஞ்சோபநிஷன் மந்திரத்தி னுல் ஸ்ருஷ்டி க்ரமத்தினுல் நியாஸம் செய்யவேண் டும். விவரம், 'ஓம் ஷௌம் நமஃ பராய பரமேஷ்டி யாத்மனே நமஃ' என்று தலையில் நியாஸம் செய்து பரமாத்மனஃ தம உத்பாதயாமி, தமஸஃ ப்ரகிருதி முத்பாதயாமி, பிரகிருதேர் மஹாந்தமுத்பாதயாமி, மஹதோஹங்கார முத்பாதயாமி அஹங்காரத் இந் திரியாணி சப்த தன்மாத்ரஞ் சோத்பாதயாமி, ஶப்த தன்மாத்ரா தாகாரமுத்பாதயாமி என்றும், ஓம் யாம் நமஃ பாராய புருஷாத்மனே நமஃ என்று மூக்கில் நியாஸம் செய்து ஆகாஶாத் ஸ்பர்ஶதன்மாத்ர முத் பாதயாமி ஸ்பர்ஶதன் மாத்ராத்வாயு முத்பாதயாமி என்றும், ஓம் ராம் நமஃ பராய ஸர்வாத்மனேநமஃ என்று மார்பில் நியாஸம்செய்து வாயோரூபதன்மா த்ர முத்பாதயாமி, ரூபதன்மாத்ராத்தேஜ உத்பாத யாமி என்றும், ஓம் வாம் நமஃ பராயஸர்வாத்மனே நமஃ என்று குஹ்யத்தில் நியாஸம்செய்து தேஜஸோ ரஸதன் மாத்ர முத்பாதயாமி ரஸதன்மாத்ராத் அபஉத்பாதயாமி என்றும், ஓம் லாம் நமஃ பாராய ஸர்வாத்மனே நமஃ என்று பாதங்களில் நியாஸம்

செய்து அத்ப்யோகந்த தன்மாத்ர முத்பாத யாமி, கந்த தன்மாத்ராத் ப்ருதிவீமுத்பாதயாமி என்று தியானம் செய்யவேண்டியது (நியாஸம் என்று கையினால் தொடுவது) பிறகு திவ்வியஶரீரம் கிடைத்ததாகத் தியானம்செய்து, மறுபடி ஒருபிராணயாமம் செய்து பகவானுடைய இடது திருவடி பெருவிரலிலிருந்து பெருகிவருகிற அமிருதமயமான தீர்த்தத்தினால் (கங்காதீர்த்தத்தினால்) ஸ்நாநம் செய்ததாகவும், ஊர்த்வ புண்டரங்கள் சங்குசக்ராங்கனங்களைத் தரித்துக்கொண்டதாகவும் தியானித்து ஆராதனத்தை ஆரம்பிக்க வேண்டும். பின்பு, * பகவானேவ உபக்ரமதே என்று ஸாத்விகத்தியாகம் செய்து, திருவஷ்டாக்ஷர ஜபத்துக்குப்போல அங்கந்யாஸ கரந்யாஸம் செய்து ஆராதனத்துக்கு உபக்கிரமிக்கவேண்டும். அனந்தரம் மானஸீக ஆராதனஞ் செய்யவேண்டும். அதாவது ஹ்ருதயகமலம் தலைகீழாகயிருப்பதை மேல்நோக்கி மலர்ந்திருப்பதாகத் தியானம் செய்து அந்தக் கமலத்தின் கீழ் சொல்லப்போகிற ஆதாரசக்தியில் திவ்யயோகபர்யந்தம் வரையில் கிரமமாகத் தியானம் செய்து அதில் படத்தில் காட்டியபடி பகவான் எழுந்தருளியிருப்பதான அர்த்தத்தோடு கூடிய "ஸவ்யம்பாதம் பிரஸார்ய ஶ்ருத துரிதஹரம் தக்ஷிணம் குஞ்சயித்வா ஜானுன்யாதாய ஸவ்யே தரமிதரபுஜம் நாகபோகேநிதாய—பச்சாத் பாஹூத்வயேந ப்ரதிபடஶமனே தாரயன் ஶங்க சக்ரே தேவீபூஷாதி ஜுஷ்டோஜனயது ஜகதாம் ஶர்ம வைகுண்டநாதஃ" என்கிற ஶ்லோகத்தில் கண்டபடி அந்தப் பகவானுடைய திவ்யமங்கள விக்கிரஹ ஸௌஷ்டுபங்களான,

* முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்தது
வோ வென்னலாம்படி திவ்யாளக பங்கதியாகிற ராத்
திரியோடே அகடிதகடனு ஸாமர்த்தியத்தாலே சேர்
ந்ததென்னலாம்படி கதிராயிரமிரவிகலந் தெரிந்தா
லொத்த நீண் முடியும், கொள்கின்ற கோளிருளைச்
சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளிலுட்கொண்ட நீலை நன்
னூல் தழைகொலென்று மாயன்குழலென்னும்படி
வதநாரவிந்த மகரந்த ரஸாஸ்வாதத்துக்காக வண்
டொழுகு படிந்தாப்போலே யசைகிற திருக்குழல்
கத்தையும், நாமென்று வண்டினங்காள் கொல் நயந்
தார்க்கு நற்சிலை கொலென்னும்படி அத்திருக்குழற்
சேர்த்தியாலே ஒருபாகமிருளோடே சேர்ந்த அஷ்
டமீ சந்திரனை அனுகரிக்கிற திருநெற்றியும், இன்
னுயிர்க்கு ஏழையர்மேல் வளையுமிளை நிலாவிற்
கொல் மன்னியசீர் மதனன் கருப்புச்சிலைகொ
லென்னும்படி அத்திருநெற்றியில் அழகுகுக் கீத்
தெடுக்கலாம்படி தன்கைச் சார்ங்க மதுபோல வட்ட

மாகிய திருப்புருவங்களும், ஏழையராவி யுண்ணு மிணைக்கூற்றங்கொலோ ஆழியங்கண்ணபிரான் திருக் கண்களோ வென்னும்படி ஈஸ்வரோஹமென்றிருப் பாரைத் தோற்பித்து, நமஸ்தேயென்று திருவடி களிலே விழப்பண்ணுமவையாய் கரியவாயநீண்ட வப் பெரிய வாய கண்களும், மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ வென்னலாம்படி ஸ்ருதி ஸுரபி நிஸ்வாஸமான கோலநீள் கொடிமூக்கும், கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ்சிவந்து கனிந் துள்ளே வெண்பலிலகு சுடரிலகு விலகுமகரகுண் டலத்தன் என்று சுற்றடிகொள்ளும்படியாயும் பல்லா யிரம் பெருந்தேவிமாரெல்லாரும் சூழத் திருக்கு றவை கோர்த்துக் கண்ணல குடந்திரத்தா லொத் தூறிகளை களைசிரித்து முன்வந்து நின்று முத்தங் கொடுக்க அனுவ்ருத்தத்தா தனப்ரஹர்ஷாதிவ புல் லங்களாய் நாச்சிமார்களுக்கு லீலாமணி தர்ப்பணங் கள்போலே யிருக்கிற திவ்யகபோலங்களும், வாலிய தோர்கனி கொல்வினையாட்டியேன் வல்வினைகொல் கோலந்திரள் பவளக் கொழுந்துண்டங் கொலோ வென்னும் கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ வென்னும்படி செம்பவளத்திரள்போலே யிருக்கிற திவ்யாதரபல்லபமும், என்று நின்றேதிகழும் செய்ய வீன்சுடர் வெண்மின்னுக்கொலன்றி என்னுவியகு மணி முத்தங்கொளென்னலாம்படியான தொண்டை வாயல் தூமுறுவலும், மகரந்தழைக்கும் தளிர்கொ ளென்னலாம்படி காந்திக்கு லீலாடோலைகள்போலே யசைகிற மகரநெடுங்குழற்காதுகளும், கோளிழைத் தாமரையும் கொடியும் பவளமும் வில்லும் கோளி

ழைத்தண்முத்தமும் தளிரும் குளிர்வான் பிறையும் கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கொ லென்னலாம்படி சுற்றுப்பொறிவட்டம் சூழ்ந்து சோதிபறந்த ஸம்பூர்ண சந்திரனும் நேரொவ்வா னென்னும்படி அழகிய திருமுக மண்டலமும், குருஷ்வமா மனு சரமென்பாரைக் கூவிக்கொள்ளும் போது ஸ்நிக்த கம்பீரமதுர நாதமாய் நாச்சிமார்களு டைய வளைத்தழும்போடு வாசியில்லாத ரேகாத்ர யத்தை யுடைத்தாய் திருமேனியொளியாலே பசுத்த ஸ்ரீபாஞ்சஜன்யம்போலே யிருக்கிற திருக்கழுத்தும், கற்பகக் காவன நற்பல தோள்களென்னலாம்படி சதுர்வித புருஷார்த்தங்களையும் வழங்குமளவன் றிக்கே- ஏதேனுமொரு கிஞ்சித்காரம் பண்ணினுர் க்கு ஸர்வஸ்வ பூதமான காட பரிஷ்வங்கத்தைக் கொடுக்கக்கடவதான திருத்தோள்களும், மரதக சிலாதவ மனோஹாரமாய் மௌக்திக ஸ்ரீவத்ஸ கௌஸ் துபராஜிதமாய் தருண துளஸீ சித்ரவைஜயந்தீ விரா ஜிதமாய் பெரிய பிராட்டியாருக்குக்கோயில் கட்டண மாய் நித்யானுபவம் பண்ணச்செய்தேயும் இறையு மகலகில்லேன் என்னும்படி அவளைப் பிச்சேறக்கட வதாய் நாச்சியாருடைய கொங்கைமேல் குங்குமத் தின் குழம்பாலலங்கிருதமாய் ஸ்ரீப தன்யாஸ தன்ய மாய் சந்திரிகோதாரஹாரமாய் திகழும் திருமார்பும், நீலமேகத்திலே நிலைமின்கொடி படர்ந்தாப்போலே திருமேனிக்குப் பரமாக ரஸாவஹமாய் அழகுவெள் ளத்துக்கு அணைகட்டினுப்போலே யிருக்கிற திரு வெண்முப்புரிநூலும், ஸௌந்தரிய ஸாகரமிட் டள யடகு சுழிந்தாப்போலே நெஞ்சையும் கண்ணையும் சுழியாறு படுத்துகிறதாய் காரேழ் கடலேழ்மலையே

மூலகுண்டு ஆராததான அயனைப்படைத்த தோரெ ழிலுந்தியும், படிச்சோதியாடையோடும் பல்லினைய நின்னைம்பொற் கடிச்சோதி கலந்ததுவோ வென்ன லாம்படி மரதகத்துக்குள்ள மொத்த திருமேனி யிலே மாணிக்கவொளி சூழ்ந்தாப்போலும் திரு வரை பூத்தாப்போலும் பொருந்தின பீதகவாடை யுடையும், காமா ராமஸ்திர கதளிகா ஸ்தம்ப ஸம் பாவ நீயங்களாய் கமலாபூமி நீளாபதானங்களாய் ஙயஞ்சத்காஞ்சீகிரண ருசிரங்களாய் லாவண்யெள கத்வய மென்னலாம்படியான திருத்துடைகளும், ஆய்ச்சி யசோதைப்பிராட்டி எழில்மத்தின் பழந் தாம்பாலோச்ச பயத்தால் தவழ்ந்த ஸௌந்தர்ய ஸார ஸமுதாயமான திருமுழந்தாள்களும், வேதங்களுக் கெல்லாம் மேல்சாத்தாய் ஸர்வாத்மாக்களுக்கும் ஸாமான்யதைவதமாய் வஜ்ரத்வஜாங்குஶ ஶூதாகல ஶாதபத்ர கல்பத்ருமாம் ஶூருஹதோரணஶங்க சக்ர மத்ஸ்யாதிமண்டிதமாய் வடிவினையில்லா மலர்மக ளும் மற்ற நிலமகளும் கூசிப்பிடிக்கவேண்டும்படி ஆத்யந்த மிருதுக்களாய் அடிச்சோதி நீ நின்ற தாமரை யாயலர்ந்ததுவோ வென்னலாம்படி ஆதார பத்மாலங்காரமாய் அணிகுருகைநகர் முனிவன்நாவுக் கமைந்த தேனேமலரும் துயரறு சுடரடியிணைகளும் நீலமேகநிபமான திருமேனியாலே நிலை மின்மகள் போலே விளங்குகிற ஜகதபிமான தேவாத்மாக்க ளாகிற திவ்யாபரணாயுதங்களும், அஞ்சன கிரியை யணைந்த சந்திராதித்தியர்கள்போல பரஸ்பர பரபா கத்தையுடையரான திருக்கையிலாழ்வார்களும், உம தடிகளடைகின்றேனென்று ஒருக்காலுரைத்தவரை அபயமினி யென்பவர்போல் அஞ்சலெனவைத்த

அபயஹஸ்தமும், அப்ராகிருத ஸ்வாஸாதாரண நிர வத்ய நிரதிஶய கல்யாணஸர்வயோக்ய பூத ஸர்வவித திவ்யகந்தானு லிப்தமான தோளிணைமேலும் நன் மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயனாய் ஸ்ரீஶடகோபன் நிற் கிற ஸ்ரீபாத ஸனாதனரான கோப்புடையசீறிய சிங்கா தனத்திலே கண்டவாத்தால் தனதே உலகென்னும் படி ஏழுலகும் தனிக்கோல் செல்ல வானுயரின்ப மன்றி வீற்றிருந்தருளும் எங்களாராவமுதமே, பொங்கோதம் சூழ்ந்தபுவனியும் விண்ணுலகும் அங் காதும்சேராமே தனிக்கோல்செல்ல வீற்றிருந்தரு ளும் எங்களாராதவருளமுதமே மெய்நின்று கேட் டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே, என்று படத்தில் கண்டபடி பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸேவையை யனுஸந்தித்து அப்படிக்கொத்த பகவானுக்கு ஸர்வோபசாரங்களையும் ஸமர்ப்பிப்ப தாக தியானஞ்செய்து மானசீக ஆராதனம்செய்து *

"பகவத் புண்டரீகாக்ஷ ஹ்ருத்யாசந்துமயாக் ருதம், ஆத்மசாத்குருதேவேஶ பாஹ்யேத்வாம் ஸம் யகர்சயே. விபோஸகலலோகேஶ பிரணதார்த்தி

* ஸௌவர்ணே ஸ்தாலிவர்யே மணிகணகசிதே
 கோக்ருதாத்தான் ஸுபக்வான்
பக்ஷ்யான் போஜ்யாம்சலேஹ்யாந்
 பரமமதஹவி: சோஷ்யமன்னம் நிதாய
நானாஶாகைருபேதம் ததிக்ருதஸஹிதம்
 க்ஷீரபானீயயுக்தம்
தாம்பூலஞ்சாத்மகேஹே பிரதி தி வஸமஹம்
 மானஸம் ஸம்ஸ்மராமி.

என்கிற சுலோகத்தை சிலர் அனுஸந்திப்பதுஉண்டு.

ஹராச்சுத த்வாம் பக்த்யா பூஜயாம்யத்யபோகைரர்க் யாதிபிஃ கிரமாத்,''

என்று அனுஸந்தித்து வெளியாராதனத்துக்கு பகவானே பிரார்த்திக்க வேண்டும். ஆராதனத்துக் குரிய புஷ்பம் சந்தனம் முதலியவைகளே வலப்பக்கத் திலும் 2-வது படத்தில் காட்டியபடி திருக்காவேரி



யில் ஜலத்தை நிறைத்து புஷ்பம் சந்தனம் முதலிய வைகளேச் சேர்த்து ஏழுதடவை மூலமந்திரத்தினுல் ஜபித்து சோஷணதாஹன ப்லாவனங்களேச்செய்து அஸ்திர மந்திரத்தினுல் திக்பந்தனஞ் செய்து ஸுரபிமுத்திரைகாட்டி தனக்கு எதிரில் 2-வதுபடத் தில் காட்டியபடி ஒரு தாம்பாளத்தில் தென்கிழக்கு முதலான நாலு மூலேகளிலும் அர்க்யம் பாத்தியம் ஆசமனீயம் ஸ்நாநீயம் மத்தியில் சுத்தோதகம் வரையிலுள்ள ஐந்து வட்டில்களே அஸ்திர மந்திரத் தினுல் அலம்பி ரோக்ஷணதாஹன பிலாவனங்களேச் செய்து திருக்காவேரியின் தீர்த்தத்தினுல் வட்டில்

களில் நிறைக்கப்பட்டு அர்க்கிய பாத்திரத்தில் ஸித்தார்த்தம் புஷ்பம் சந்தனம் தர்ப்ப நுனி அக்ஷதைகளையும் பாத்யபாத்திரத்தில் அருகம்புல் விஷ்ணுக்ராந்தம் ஶ்யாமம் பத்மாகம் இவைகளையும், ஆசமனீய பாத்திரத்தில் ஏலம் லவங்கம் தக்கோலம் விலாமுச்சி ஜாதிபுஷ்பம் இவைகளையும் ஸ்நாநீய பாத்திரத்தில் மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், முரை சைலேயம், தக்கோலம், ஜடாமாசி, சந்தனம், செண்பகமொக்கு, இவைகளையும் சேர்த்து, மத்தியில் ஸர்வார்த்ததோயம் என்கிற சுத்தோதகத்தையும் கல்பிக்கவேண்டும்.

அர்க்ய பாத்திரத்தை கையினல் மூடிக்கொண்டு (ஓம் நமோ பகவதே அர்க்யம் பரிகல்பியாமி) என்றும், அப்படியே பாத்யம் ஆசமனீயம் ஸ்நாநீயம் ஸர்வார்த்த்தோயம் இவைகளையும் பரிகல்பனம் செய்யவேண்டும். அனந்தரம் அர்க்ய பாத்ரத்திலிருக்கிற ஜலத்தில் உத்தரணியினல் ஜலமெடுத்து ஆராதனம் செய்கிற விடத்தையும் ஆராதன ஸாமான்களையும் தன்னையும் தனித்தனியே புரோக்ஷிக்கவேண்டும். கீழ்கூறியவண்ணம் ஆதாரசக்தியாதிகளை தியானம் செய்யவேண்டும்.

ஓம் ஆதாரசக்த்யைநமஃ, ஓம் பிரகிருத்யைநமஃ, ஓம் அகிலஜகதாதாராய கூர்மரூபிணே நாராயணாய நமஃ, ஓம் அனந்தாயநாகராஜாயநமஃ, ஓம் பூம்பூம்யை நமஃ இப்படி ஒன்றின்மேல் ஒன்ருக யிருப்பதாக தியானஞ்செய்து ஸேவிக்கவேண்டும்.

ஓம் ஸ்ரீவைகுண்டாய திவ்ய லோகாயநமஃ, ஓம் ஸ்ரீ வைகுண்டாய திவ்யஜனபதாயநமஃ ஓம் ஸ்ரீ வைகுண்டாய திவ்யநகராயநமஃ, ஓம் ஸ்ரீவைகுண்

டாய திவ்யவிமானுயநமஃ, ஓம் ஆனந்தமயாய திவ்ய மண்டபரத்னுயநமஃ'' ஓம் ஆஸ்தரணரூபிணே அனந் தாய நாகராஜாய நமஃ, இப்படி திவ்யலோகம் திவ்ய ஜன பதம் திவ்ய நகரம் திவ்யவிமானம் திவ்யமண் டப ரத்னம் திவ்ய மயமான மேல்கட்டு ரூபமான ஆதிசேஷனையும் இவைகள் ஸ்ரீவைகுண்டத்தில் இரு ப்பதாகவும் ஸேவித்து அதற்குமேல் ஓம் தர்மாய பீடபாதாய நமஃ, ஓம் கியானுயபீடபாதாயநமஃ ஓம் வைராக்யாய பீடபதாய நமஃ, ஓம் ஐஶ்வர்யாய பீட பாதாய நமஃ என்று அக்கினிமூலையிலிருந்து நான்கு மூலைகளிலிருக்கும் பீடபாதங்களையும், ஓம் அதர் மாய பீட காத்ராய நமஃ, ஓம் அக்யானுபபீட+நமஃ, ஓம் அவைராக்யாபீட+நமஃ, ஓம் அனைஶ்வர்யாய பீட+நமஃ, என்று கிழக்கிலிருந்து நான்குதிக்கு களில் நான்குபீட காத்ரங்களிருப்பதாயும் ஸேவி த்து, ஓம் ஏபிஃ பரிச்சின்னதனவே பீடப்ருதே ஸதாத்மனே அனந்தாய நாகராஜாயநமஃ, என்று ஆதிசேஷனையும், அதற்குமேல் ஓம் அஷ்டதளபத் மாய நமஃ என்று எட்டிதழோடுகூடிய தாமரஸ புஷ்ப மிருப்பதாகவும், அதன் கிழக்கு முதலான எட்டு இதழ்களில் முறையே ஓம் விமலாயை சாமரஹஸ் தாயை நமஃ, ஓம் உத்கர்ஷிண்யைசாமர+நமஃ, ஓம் க்யானுயைசாமர+நமஃ ஓம் க்ரியாயை சாமர+நமஃ ஓம் யோகாயை சாமர+நமஃ, ஓம் ப்ரப்வ்யைசாமர+ நமஃ, ஓம் ஸத்யாயைசாமர+நமஃ, ஓம் ஈசானாயை சாமர+நமஃ, என்று எட்டுசக்திகள் ஒவ்வொருவரும் ஒருகையில்சாமரத்தை வகித்தும் ஒருகையினல் பக வானை ஸேவித்துமிருப்பதாக தியானித்தும் அந்தத் தாமரை புஷ்பம் நடுவிலிருக்கும் கர்ணிகையில் ஓம்

அனுக்ரகாயையசாமர + நமஃ என்று முன்போல் ஒரு சக்தியிருப்பதாயும் தியானிக்கவேண்டும். அவர்களுக்குமேல் ஓம் ஜகத்ப்ரக்ருதயே திவ்யயோக பீடாய நமஃ என்று யோகபீடத்தையும், ஓம் திவ்யோகபர்யங்காயநமஃ என்று உயர்ந்த படுக்கையையும், ஓம் ஸஹஸ்ரபணாமணி மண்டிதாய அனந்தாய நாகராஜாய நமஃ, என்று ஆயிரம் பணாமகுடத்தோடு கூடிய ஆதிசேஷனிருப்பதாயும் தியானித்து, பாதபீடத்தில், ஓம் அனந்தாய நமஃ, நாகராஜய நமஃ என்று அனந்தனையும், ஓம் ஸர்வ பரிவாராணாம் பத்மஸனேப்யோநமஃ, என்று மேல் சொன்ன பரிவாரங்களுக்கெல்லாம் பத்மாஸன மிருப்பதாகவும், ஓம் அனந்த கருடவிஷ்வக்ஸேனாணாம் ஸபீடகபத்மாஸனேப்யோ நமஃ என்று கீழ்வரப் போகிற அனந்தகருட விஷ்வக்ஸேனாதிகளுக்கு பீடத்துடன் கூடிய பத்மாஸனமிருப்பதாயும் த்யானஞ் செய்து கந்த புஷ்ப தூபதீபங்களால் பூஜித்து மேலே சொன்ன திவ்யயோகபீடத்துக்கு வடமேற்கில், ஓம் அஸ்மத் குருப்யோ நமஃ என்றும்,

குரவஸ்ததீயகுரவோதிஸந்து
மமஸாத் வனுக்கிரகம்
யுஷ்மதுபஜனித ஸக்திமதிரஹம்
ஹரிமர்சசயாமி கதபிஃ ப்ரஸீதத.

என்று ஆசாரியாளை தியானபுரஸ்ஸரமாக அனுஸந்திக்க வேண்டும். இப்படி ஸ்தோத்ரம் செய்து அந்த ஆசாரியர்களிடத்தில் பகவதாராதனம் செய்ய அனுமதிபெற்றுக்கொண்டு.

(ஓம் ஸ்ரீமதே நாராயணுயநமஃ) என்று தியானஞ் செய்து, பகவன் ஸமாராதனுபிமுகோபவ, என்று பிரார்த்தித்து, மேலே சொன்ன நாக பர்யங்கத்தில் தாமரை புஷ்பம்போன்ற நிர்மலமானதும், விசாலமுள்ளதுமான அழகிய திருக்கண்களோடு கூடியவனும், கிரீடஹார கேயூரகடக கங்கணம் முதலான ஸர்வாபரண பூஷிதரான மேலே காட்டிய 1-வது படத்தில் கண்டபடி எழுந்தருளியிருக்கும் பகவானை பஞ்சோபநிஷன் மந்திரங்களினுல் தியானஞ் செய்து திருவஷ்டாக்ஷரத்தினுல் பிரணுமம் செய்து.

ப்சம்மாத்யா ஸ்ஸகலாதேவா:
  யன்னஸ்மர்த்து மபீஸ்வராஃ
ஸயேஷ பகவானத்ய
  மமப்ரத்யக்ஷதாம் கதஃ!
ஸ்வாகதம் பகவானத்ய
  மாந்தாரயிதுமாகதஃ
தன்யோஸம் யனுக்ரீஹீதோஸ்மி
  கிருதார்த்தோஸ்மி க்ருபாநிதே.

என்று நல்வரவு விசாரித்து,

ஸான்னித்யம் குருதேவேஶ
ஸர்வதாஸர்வ காமதா
த்ரவ்யமந்திர க்ரியாபக்தி
ஶ்ரத்தாஹானிம் ஸஹப்ரபே.

என்று பிரார்த்திக்கவேண்டும். அந்த பகவானுடைய வலப்பக்கத்தில், ஓம் ஸ்ரீம் ஸ்ரீயைநமஃ என்று மஹாலக்ஷ்மியையும், இடதுபக்கத்தில் ஓம் பூம் பூம்யை நமஃ, ஓம் நீம் நீளாயை நமஃ என்று பூமி நீளைகளையும்,

தியானித்தும் ஸேவித்தும், ஓம் கிரீடாப மகுடாதி பதயேநமஃ, என்று பகவானுடைய மேலண்டை பக்கத்திலிருந்தபடியே நாலுமுகம் நாலு கைகளுடன் கைகூப்பியவண்ணம் பகவானுடைய சிரசில் கிரீடமிருப்பதாயும் (ஓம் கிரீடமாலாயை ஆபீடாத்மனே நமஃ) என்று அங்கேயே பகவானுக்கு எதிரில் கிரீடத்துடன் மாலையிருப்பதாயும் (ஓம் தக்ஷிணகுண்டலாய மகராக்மனேநமஃ) என்று வலக்காதில் அணிந்திருக்கும் மகரகுண்டலமென்கிற கடுக்கனையும், (ஓம் வாம குண்டலாய மகராத்மனே நமஃ) என்று இடது காதிலிருக்கும் கடுக்கனையும், (ஓம் வைஜயந்த்யைவநமாலாயை நமஃ) என்று வனமாலையையும் (ஓம் ஸ்ரீமத் துளஸ்யை நமஃ) என்று துளஸீதேவியையும் ஸேவித்து, (ஓம் ஸ்ரீவத்ஸாய ஸ்ரீநிவாஸாய நமஃ) என்று மருவை தரித்திருப்பதாயும், (ஓம் ஹாராயஸர்வாபரணாதிபதயேநமஃ) என்று ஹாரம் என்கிற பூஷணம் தரித்திருப்பதாயும், (ஓம் கௌஸ்துபாயஸர்வரத்னாதிபதயேநமஃ) என்று ரத்ன ஷ்ரேஷ்டமான கௌஸ்துபம் என்ற திவ்யாபரணம் தரித்திருப்பதாயும், ஓம் காஞ்சீ குணோஜ்வலாய திவ்ய பீதாம்பராய நமஃ என்று திவ்ய பீதாம்பரம் தரித்திருப்பதாயும், (ஓம் ஸர்வேப்யோபகவத் திவ்யபூஷணேப்யோநமஃ (என்று எல்லா திருவாபரணங்களையும் தரித்திருப்பதாக ஸேவித்து (ஓம் ஸுமர்சகாய ஹேதிராஜாயநமஃ) என்றும், (ஓம் நந்தகாய கட்காதிபதயேநமஃ) என்றும், (ஓம் பத்மாயநமஃ) என்றும் பகவானுடைய வலது பக்கத்தில் சக்கரம் கத்திபத்மம் முதலான ஆயுதங்கள் தரித்திருப்பதாயும், பகவானுடைய இடதுபக்கத்தில் (ஓம் பாஞ்சஜன்யாயஶங்காதிபதயே நமஃ(

என்றும் (ஓம் கௌமோதக்யை கதாதிபதயேநமஃ) என்றும் (ஓம் ஶார்ங்காயசர்பாதிபதயே நமஃ) என்றும் சங்கம் கதை வில் இந்த ஆயுதங்களை தரித்திருப்பதாயும் (ஓம் ஸர்வேப்யோபகவத் திவ்யாயுதேப்யோ நமஃ) என்று பகவானுடைய எல்லா திவ்யாயுதங்களையும் தரித்திருப்பதாக த்யானபுரஸ்ஸரமாய் ஸேவித்து ஓம் ஸர்வாப்யோபகவத் பாதாரவிந்தஸம் வாஹினீப்யோ நமஃ என்று பகவானுடைய திருவடிகளைத் தாங்கும் எல்லோரையும் தியானிக்கவேண்டும்.

(ஓம் அனந்தாய நாகராஜாயநமஃ) என்று ஆதிசேஷனையும், ஓம் ஸர்வேப்யோபகவத் பரிஜனேப்யோநமஃ, என்று பகவானுடைய பரிஜனங்களையும், ஓம் பகவத்பாதுகாப்யாம்நமஃ என்று பகவானுடைய எதிரிலிருக்கும் திவ்யபாதுகைகளையும், (ஓம் ஸர்வேப்யோபகவத் திவ்ய பரிச்சதேப்யோநமஃ) என்று பகவானுடைய நாலுபக்கத்திலுமுள்ள பரிச்சதங்களையும், (ஓம் வம்வைநதேயாயநமஃ) என்று பகவானுடைய எதிரிலிருக்கும் கருடனையும், அவருக்கு ஈசானிய மூலையில் (ஓம் ஸ்ரீமதே விஷ்வக்ஸேனாய நமஃ) என்று சேனைமுதலியாரையும், அவருடைய நாலுபக்கத்தில் (ஓம் கம் கஜானனாயநமஃ) என்றும், (ஓம் ஜம் ஜயத்ஸேனாயநமஃ) என்றும், (ஓம் ஹம் ஹரிவக்த்ராயநமஃ) என்றும் (ஓம் கம் காலப்ரகிருதிஸம்ஜ்ஞகாய நமஃ) என்றும் சேனைமுதலியாரின் பரிஜனங்களையும், (ஓம் ஸர்வேப்யோ பகவத் விஷ்வக்ஸேன பரிஜனேப்யோ நமஃ) என்று பகவானுடைய எல்லா விஷ்வக்ஸேன பரிஜனங்களையும் ஸேவித்து, பகவத் ஸன்னிதி கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு வாசல்களில் முறையே (ஓம் சண்டாயத்வாரபாலாய நமஃ)

(ஓம் பிரசண்டாயத்வாரபாலாய நமః) (ஓம் பத்ராயத் த்வாரபாலாய நமః) (ஓம் ஸுபத்ராய துவாரபாலாய நமః) ஓம் ஜயாய துவாரபாலாய நமః) (ஓம் விஜயாய துவாரபாலாயநமః) (ஓம் தாத்ரே துவாரபாலாயநமః) (ஓம் விதாத்ரெதுவாரபாலாய நமః) (ஓம் ஸர்வே ப்யோ பகவ்த்து வாரபாலேப்யோ நமః) என்று எல்லா துவாரபாலகர்களையும் ஸேவித்தும், (ஓம் குமுதாய கணுதிபதயேஸ வாஹனபரிவார ப்ரஹா ணுய நமః) (ஓம் புண்டரீகாய+ப்ரஹாரணுய நமః,) (ஓம் வாமனுய+பிரஹாரணுய நமః) (ஓம் ஶங்குகர் ணுய+பிரஹாரணுய நமః) ஓம் ஸர்ப (வ), நேத்ராய+ பிரஹாரணுய நமః) (ஓம் ஸுமுகாய+பிரஹாரணுய நமః) (ஓம் ஸுப்ரதிஷ்டிதாய+பிரஹாரணுய நமః) என்று கிழக்கு ஆதியாய் வடக்குவரையிலுள்ள வாச லில் பார்ஷதகணங்களையும், (ஓம் ஸர்வேப்யோ பக வத் பார்ஷதேப்யோ நமః என்று எல்லாபார்ஷத கணங்களையும் தியானஞ் செய்து ஸேவிக்க வேண் டும். இங்கு ஆதாரசக்தியாதிகளின் மஹிமைகளை கிரமமாகச் சொன்னுல் கிரந்தம் வளருமென்று சுரு ங்கச் சொல்லப்பட்டது. பிறகு மந்திராஸனம் ஸமர்ப்பித்து,

இஜ்யாகாலஸ் திருதியோயம்
அஹனேம்சஸ் ஸமுபாகதః
ஸம்ப்ருதாச்சைவ ஸம்பாராః
கல்பிதான்யா ஸனுனிச்
ஸ்நானுர்த்த மிஹதேவேஶ
தவேச்சா வாத்ததேயதி
அவலோகன தானேன
ததஸர்வம் ஸபலம்குரு.

ததர்த்தம் ஸஹதேவிப்யாம்
ஸானுகைஸ் ஸசிவைஸ்ஸஹ
மதனுக்ரகாயக்ருபயா
ஹ்யத்ராகந்தும் த்வமர்ஹஸி.

என்று பிரார்த்திக்கவேண்டும். பிறகு அர்க்யம் ஸமர்பித்து இரண்டுகைகளேயும் ஏந்திக்கொண்டு.

(அக்ருத்தி மப்ரேமரஸ நிர்பரைஸ்வகராம் புனஜா: சுத்தைஸ்பாவ ஸுபகை: ஸுகஸ் ஸுபர்ஸை: ஸுகந்திபி:, ஸம்வாஹ்யமான மனிசம் ஸோஷஸோஷாஸனுதிபி: அஸத்யஸ்யாதி நீசஸ்யபக்தி ஹீனஸ்ய துர்மதே மமாபி கரயோரத்ய ஸ்வயைவ க்ருபயாஹரே நிதேஹி சரணத்வந்வதம் த்வாமஸ்மி ஸரணம் தத:)

என்று பிரார்த்தித்து திருவடிகளேப் பிடித்து விட்டு பாத்யம் ஸமர்ப்பிக்கவேண்டும்.

அர்க்ய பாத்திரத்திலிருந்து அர்க்யமும் பாத்வ பாத்திரத்திலிருந்து பாத்யமும் ஆசமனிய பாத்திரத்திலிருந்து ஆசமனீயமும் ஸமர்ப்பிக்கிறது. ஒவ்வொரு உபசாரங்களேயும் ஸமர்ப்பிக்கும் பொழுது இதம் அர்க்யம் அவலோகய என்று காண்பித்து அர்க்யம் ப்ரதிக்ருணிஷ்வ என்று ஸமர்ப்பித்து (ஸர்வாபராதான்க்ஷமஸ்வ) என்று பிரார்த்தித்து (அனேன பகவான் ப்ரீயதாம் வாஸுதேவ:) என்று அநுஸந்திக்க வேண்டும்.

அதாவது ப்ரதர்ஸநம் ப்ரதானம், க்ஷமாபணம் ப்ரீணனம் என்கிற நாலு உபசாரங்களுடனும் கூடவே எல்லா உபசாரங்களேயும் ஸமர்ப்பிக்க வேண்டும். அர்க்யம் என்பது ஒருதடவை, பாத்யம் இர

ண்டு தடவை, ஆசமனியம் மூன்று தடவை. அர்க்யம் பெருமாளுக்கு காண்பிப்பது, பாத்யம் திருவடியை அலம்புவது, ஆசமனியம் பகவானுக்கு ஆசமனம் செய்வதாகக் காண்பிப்பது ஆசமனியம் ஸமர்ப்பிக்கவேண்டும். எல்லாவற்றையும் திருவஷ்டாக்ஷரத்தினாலேயே ஸமர்ப்பிக்க வேண்டும். அனந்தரம் சந்தனம் புஷ்பம், தூபம், தீபம், ஆசமனீயம் முகவாஸ தாம்பூலம் ஸமர்ப்பிக்க வேண்டும். ஸ்நாநாஸனம் ஸமர்ப்பித்து,

ஸ்நாநகாலஸ் த்வயம் ப்ராப்தஃ
தவேச்சாவர்த்ததேயதி,
அப்யஞ்ஜ்ஞித்வா தேவேஸ
ஸுஸ்நானம் கர்த்துமர்ஹஸி
ஸ்புடீக்ருதம் மயாதேவ
இதம் ஸ்நாநாஸனம்பரம்
ஸபாதபீடம் பரமம்
இதம் ஸ்நாநாஸநம் மஹத்
ஆஸாதயாஸு ஸ்நாநார்த்தம்
மதனுக்ருக காம்யயா.

என்று பிரார்த்தித்து ஸ்நாநாஸனத்தை ஸமர்ப்பித்து சந்தன புஷ்பாதிகளினால் ஆஸனத்தை அலங்கரித்து பகவானை ஸேவித்து அனுமதி பூர்வமாக பாதுகைகளை ஸமர்ப்பித்து அதில் பகவானை எழுந்தருளப்பண்ணி வஸ்திரம் மாலை புஷ்பம் இவைகளைக்களைந்து விஷ்வக்ஸேனரிடத்தில் ஒப்புவித்துவிட்டு ஸ்நான வஸ்திரம் ஸமர்ப்பித்து அர்க்யபாத்யா சமனீயங்களை முன்போல ஸமர்ப்பித்தும் பிறகு திருமணிஸேவித்துக்கொண்டு பாதபீடதந்த காஷ்ட ஜிஹ்வா நிர்லேகன கண்டுஷ ஹஸ்த ப்ரக்ஷாளன ஆசமன ஆதர்சப்ர

தான ஹஸ்த ப்ரக்ஷாளன முகவாஸ தாம்பூல தைலா ப்யங்க உத்வர்தன ஆமலகதோயகங்கதப்லோத வஸ் திரஹரி த்ரரலேபந ப்ரக்ஷாளனவஸ்திரோததரீய யக்யோபவீத பாத்யாசமன பவித்ரப்ரதான கந்த புஷ்ப தூப தீபாசமன ந்ருத்தகீத வாத்யாதிஸர்வ மங்களயுக்தாபிஷேக நீராஜனசமன தேஹஸோதன வஸ்தரோத்தரீய யக்யோப வீதாசமனுபிஷேக நீரா ஜனசமனம் முதலானவைகளை ஸமர்ப்பிக்கவேண் டும். பிறகு அலங்காராஸனம் ஸமர்ப்பித்து:—

ஸம்பன்னம் தேவஸத்வஸ்திரம்
பூஷாஸ்ருக் சந்தனுதிகம்
அலங்காராஸனம் பத்ரம்
அதிதிஷ்டத்ருதீயகம்.

என்று பிரார்த்தித்து அலங்காராஸனத்தைப் பூஜித்து பகவானைஸேவித்து அனுமதிபெற்று பாது கைகளை ஸமர்ப்பித்து அதில் பகவானை யெழுந்தரு ளப்பண்ணி (வெண்ணெயளைந்த பத்து பாசுரங்களை) ஸேவித்து வட்டில்களிலிருக்கும் பழைய தீர்த்தங் களை பிரதி கிரக பாத்திரத்தில் சேர்த்து விட்டு, வட்டில்களை ஸோதித்து அவைகளில் தீர்த்தங்களை பூரித்து முன்போலவே ஸ்நாநீயம் தவிர அர்க்யம், பாத்யம்,ஆசமனியம், ஸர்வார்த்ததோயம் இவைகளை பரிகல்பனம் செய்து, பகவானுக்கு முன்போலவே அர்க்யபாத்யா சமனீயங்களை ஸமர்ப்பித்து கந்தம்புஷ் பம் பாதஸம்வர்த்தனம் வஸ்திரம்உத்தரியம்பூஷணம் யக்போபவீதம் ஆசமனீயம் இவைகளை ஸமர்ப்பிக்க வேண்டும். திருமணி ஸேவித்தபடியே தூப தீபம் ஸமர்ப்பித்து பகவானுக்குள்ள சின்னங்கள் முத

லான உபசாரங்களை ஸமர்ப்பித்து, (மந்திர புஷ்பம்) ஸேவித்து திருவஷ்டாக்ஷரத்தினால், புஷ்பம் துளஸி அக்ஷதைகளினால் அர்ச்சித்து, அதாவது ஒவ்வொரு அக்ஷரத்தினாலும் துவாதசாக்ஷரம் ஷடக்ஷரம் விஷ்ணுகாயத்ரி பஞ்சோபநிஷத் மந்திரங்கள் புருஷஸூக்த ருக்குகள் இவைகளினாலும் இதரபகவந் மந்திரங்களினாலும் சக்தியுள்ள வரையில் அர்ச்சனை ஸமர்ப்பிக்கவேண்டும். பின்பு ஸம்பிரதாயப்படி ஸேவிக்கிறப்ரகாரம் (ராமாநுஜ தாயாபாத்ரம் முதலான தனியன்களை ஸேவித்து, திருப்பல்லாண்டு, பூச்சூடல், காப்பிடல், திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருவாய்மொழி, இராமாநுஜ நூற்றந்தாதி, அடைக்கலப்பத்து, அதிகாரஸங்கிரகம், பிரபந்தஸாரம், பிள்ளையந்தாதி, முதலியவைகளை காலோசிதமாக முழுமையுமாவது ஆத்யந்த மாகவாவது ஸேவிக்கவேண்டியது. மற்ற பரிவாரங்களுக்கும் ஸ்நாநம் வஸ்திரம் பூஷணங்கள் வரையில் ஸமர்ப்பித்து கந்தம் முதலியவைகளை பகவானுக்கு ஸமர்ப்பித்தபிறகு ஸமர்ப்பிக்க வேண்டும். அர்க்கியாதிகள் வேண்டியதில்லை. பின்பு பகவானை பிரதக்ஷண பிரணாமங்களைச் செய்து புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்க வேண்டும்.

போகோபவர்க்க பலதான்
புங்க்ஷ்வபோகான் ஜகத்குரோ
ஸதாமப்யஸதா மேஷா
அஸ்துதே பரிபூர்ணதா.

என்று பிரார்த்தித்து, அர்க்ய தீர்த்தத்தினால் மாத்ராதானம் ஸமர்ப்பித்தல் வேண்டும். பிறகு போஜ்யாஸனம் ஸமர்ப்பித்து.

ப்ராப்யந்து ப்ராபணேகாலே
பதத்யாநீத யேஷதே
ம்ருஷ்டமேத்ய ஸதிரான்னனி
பக்ஷயபோஜ்யான் யனேகஶ:
ஸம்பன்னனி ஜகன்னத
போஜ்யாஸன முபாஶ்ரய.

என்று பிரார்த்தித்து போஜ்யாஸனத்தைப் பூஜித்து பகவானிடத்தில் அனுமதிபெற்று பாதுகைகளை ஸமர்ப்பித்து அதில்பகவானை எழுந்தருளப்பண்ணி பாத்யாசமனீய அர்க்யம் இவைகளை ஸமர்ப்பித்து மதுவர்க்கம் ஸமர்ப்பித்து (அதாவது) வெல்லம், தேன், பால், தயிர், நெய் இவைகளை தனித்தனியே பாத்ரங்களில் வைத்து ப்ரோக்ஷணதாஹன ப்லா வனங்களைச் செய்து அர்க்ய தீர்த்தத்தினுல் புரோக்ஷித்து அமுது செய்தருளப்பண்ண வேண்டியது.

பிறகு கண்ணுடி, ஸ்வர்னம், ரத்னங்கள். தனதானியங்கள் முதலிய எல்லா வஸ்துக்களையும் பகவானுக்கு எதிரில் வைத்து முன்போல் புரோக்ஷித்து பகவானுக்கு ஸமர்ப்பிக்கவேண்டும். அனந்தரம் நன்ருகவும் பரிசுத்தமாகவும் பாகம்செய்யப்பட்ட அன்னங்களையும், நெய், பால், தயிர், பழம், தேன், கிழங்குகள் முதலிய வியஞ்ஜனங்களையும் தனக்கு யிஷ்டங்களாயும் ஶாஸ்திரங்களுக்கு விரோதமில்லாமலும் இருப்பவைகளை பகவானெதிரில் ஸமர்ப்பித்து அர்க்ய தீர்த்தத்தினுல் புரோக்ஷித்து அஸ்திரமந்திரத்தினுல் திக்பந்தனம் செய்து ஸுரபி முத்திரையைக் காட்டி பாத்யாசமனங்கள் ஸமர்ப்பித்து ஹவிர்நிவேதனம் செய்யும்பொழுது கைகளைக்கூப்பிக்கொண்டு தலை வணங்கி நின்று அர்க்யதீர்த்தத்தையெடுத்து.

அஸத்யம்ஶுசிம்நீசம் அபராதைகபாஜநம் [வபி
அல்பஶக்திமசைதன்யம் அனர்ஹம் த்வத்க்கரியாஸ்
மாமனுத்ருத்யதுர்புத்திம் ஸ்வயைவக்ருபயாவிபோ
அதிப்ரபூதமத்யந்தம் பக்திஸ்நேஹோப பாதிதம்
ஶுத்தம்ஸர்வகுணோபேதம் ஸர்வதோஷவிவர்ஜிதம்.

ஸ்வானுரூபம் விஶேஷேண
ஸவதேவ்யோஸ் ஸத்ருஶம்குணை:
த்வமேவேதம் ஹவி:க்ருத்வா
ஸ்வீகுருஷ்வ ஸுரேஶ்வர
பாயஸான்னம் குடான்னஞ்ச
முத்கான்னம் ஶுத்தமோதனம்
ததிக்ஷீராஜ்ய ஸம்மிஶ்ரம்
நாநாபூபபலான்விதம்
யதீந்திர யாமுனே யாத்யை:
பராங்குஶ முகைரபி
நிவேத்யமானம் ஸநிவேத்யம்
ஸ்வீகுருஷ்வ ஸுரேஶ்வர

என்று ப்ரார்த்திக்கவேண்டும். திருமணிஸே வித்தபடியே கிராஸமுத்திரையினால் * திருவஷ்டா க்ஷரத்தினால் தளிகை ஸமர்ப்பிக்கவேண்டும். மத்தியில் ஸர்வார்த்ததோயத்தினால் பானீயம் ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி இவர்களுக்கும் யதாபாகமாக கண்டருளப்பண்ணி ஸ்ரீய: பதியான ஸர்வேஶ்வரனுக்கும் ஸ்ரீதேவிபூதேவி

* இந்த இடத்தில் சில ஸம்பிரதாயஸ்தர்கள் பரிஷேஶனம்செய்து ப்ராணஹுதி மந்திரத்தினாலும் (அஹமஸ்மைப்ரதமஜாருதஸ்ய) என்கிற வேதருக்கினாலும் நிவேதனஞ் செய்வது முண்டு.

நீளாதேவிகளுக்கும் அஸ்தப்ரக்ஷாளன ஆசமன அஸ்தஸம்மார்ஜனம் சந்தனம் முகவாஸதாம்பூலம் இவைகளை ஸமர்ப்பிக்க வேண்டும்.

அதன்பிறகு-மந்திராசனத்தை துடைத்து பூஜித்து

அத மந்திராஸனம் துப்யம்
மயாதத்தமனுத்தமம்
கூர்ச்சேநஸோதிதம் விஷ்ணோ
புநராஸாதயப்ரபோ.

என்று பிரார்த்தித்து பகவானிடத்தில் அனுமதிபெற்று பாதுகைகளை எழுந்தருளப்பண்ணி சந்தனம் மாலை இவைகளைக் களைந்து ஸேனைமுதலியாரிடத்தில் கொடுத்து, பாத்யாசமனம் சந்தனம், புஷ்பம், தூபம, தீபம், ஆசமனம் பக்ஷ்யம் பழம் ஆசமனீயம் இவைகளை ஸமர்ப்பிக்கவேண்டும்.ந்ருத்த கீதவாத்யங்களினால் இரண்டு தடவைக்குக் குறையாமல் பிரதக்ஷிணம்செய்து அஷ்டாங்கப்ரணாமம்செய்து பர்யங்காஸனத்தைத் துடைத்து வணங்கி,

பகவன் புண்டரீகாக்ஷ கருணா மிருதவாரிதே
ஆஸாதயமயாதத்தம் பர்யங்காஸனமுத்தமம்.

என்று பிரார்த்தித்து பகவானிடத்தில் அனுமதிபெற்று பாதுகைகளை ஸமர்ப்பித்து அதில் பகவானை எழுந்தருளப்பண்ணியதாக தியானித்து, பாத்யாசமனீயம் ஸமர்ப்பித்து, மாலை, பூஷணம், வஸ்திரங்கள் முதலியவைகளைக் களைந்து விஷ்வக்ஸேனரிடம் ஒப்புவித்து, ஸுகஶயனத்துக்குரிய சந்தனம், வஸ்திரம், பூஷணம், வஸ்திரங்கள் முதலியவைகளைக் களைந்து

விஷ்வக்ஸேனரிடம் ஒப்பிவித்து, ஸுகஸயனத்துக் குரிய சந்தனம் வஸ்திரம் பூஷணம் மாலை உபவீதம் இவைகளை ஸமர்ப்பித்து ஆசமனம் முகவாஸதாம்பூல மும் ஸமர்ப்பித்து திருமணிஸேவித்தபடியே. கற்பூர ஆர்த்தியை வேதரிக்கினுல் ஸமர்ப்பித்து, திராவிட ப்ரபந்த சாத்துமறைகளை வாழிதிருநாமத்துடன் செய்து ஸாத்விக த்யாகமும் செய்யவேண்டும்.

பகவன்னிவேதன அன்னம் முதலியவைகளை மூன்று பாகமாகப்பிரித்து ஒருபாகம் அனந்த கருட ஆசாரியாதிகளுக்கும், ஒருபாகம் விஷ்வக்ஸேனருக் கும், மற்றொருபாகம் காரிகைகளுக்கும் உபயோகப் படுத்த வேண்டியது. விஷ்வக்ஸேனருக்கு நிவே தனம் செய்ததை ஜலத்தில் சேர்த்துவிடவும். பிறகு பகவத் ஸன்னிதி திருக்காப்பு சாத்திவிட்டு வெளி யில் புறப்படும்பொழுது பெருமாள் தீர்த்தத்தைத் தானும் உட்கொண்டு, பக்தஜனங்களுக்கும் வினி யோகம் செய்து, திருத்துழாய் புஷ்பம் சந்தனமும் உபயோகப்படுத்தி, தனக்கு ஸர்வவிதபந்துவான பகவானைவிட்டுப் பிரியும்பொழுது,

உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே
அறவெறிநாந்தகவாளே அழகியசார்ங்கமே தண்டே
இறவுபடாமலிருந்த எண்வர்லோகபாலீர்காள்
பறவையரையா'வுறகல்பள்ளியறைகுறிக்கொண்மின்.

என்றும்,

உபசாரபதேஸேனகிருதாநஹரஹர்மயா
அபசாராநிமாம்ஸர்வான்க்ஷமஸ்வபுருஷோத்தம.

என்று அபசாரக்ஷாபணம் செய்துகொண்டு துவார பாலகர்களிடம் நியமனம்பெற்று திரும்பி வரவேண்டும்.

ஸ்ரீமதே ஸ்ரீகோபால தாதயார்ய
மஹாதேஶிகாய நம:

திருவாராதனக்ரமம் முற்றிற்று.

என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர்குருக்கள் நிரைவணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிக ளடைகின்றேனே.

விசேஷ ஆராதனங்கள்

ஸ்ரீராம நவமி

தஶானனவதார்த்தாய தர்மஸம்ஸ்தாபனாயச
பரித்ராணாயஸாதூனாம் ஜாதோராமஸ்வயம்ஹரிஃ
க்ருஹாணார்க்யம்மயாதத்தம்ப்ராத்ருபிஸ்ஸஹிதோநக
என்று கூடப்பிறந்தவர்களுடன் கூடிய ஸ்ரீராம பிரானுக்கு அர்க்யம் ஸமர்ப்பிக்கிறது.

ஸ்ரீ ஜயந்தி

பகவானுக்கு எதிரில் தான்யத்தைப் பரப்பி அதில் சங்கத்தை வைத்து ஶங்கின் நுனியில் சந்திரனையும் அடியில் கிருஷ்ணனையும் ஆவாஹனம் செய்து புண்யாஹஜலத்தினால் புரோக்ஷித்த பசுவின்பாலும் ஜலமும் கலந்ததை சங்கிலெடுத்து,

ஜ்யோதஸ்நாபதே நமஸ்துப்யம்
நமஸ்தேஜ்யோதிஷாம்பதே
நமஸ்தே ரோஹிணி காந்த
ஸுதாகும்ப நமோஸ்துதே
ஜானுப்யா மவனீக்ருத்வா
சந்த்ரா யார்க்யம் நிவேதயேத்
க்ஷீரோதார்ணவ ஸம்பூத
த்ரிநேத்ரஸம்பூத்பவ
க்ருஹாணார்க்யம் ஶஶாங்கேதம்
ரோஹிண்யாஸஹிதோநக

என்று சந்திரனுக்கு அர்க்யமும், புஷ்பம் பழம் சந்தனம் இவைகளுடன் ஶங்கில் எடுத்து மண்டியிட்டு,

ஜாதஃ கம் ஸவதார்த்தாய பூபாரோத்தரணுயச
பாண்டவாணும் ஹிதார்த்தாயதைத்யாணும் நிதனுயச.

கௌரவாணும் விநாஶாயஜக்யேக்ருஷ்ணஸ்வயம்ஹரிஃ
க்ருஹாணர்க்யம மயாத்தம் தேவக்யாஸஹிதோநக.

க்ருஷ்ணக்ருஷ்ண க்ருபாளோத்வம் அகதீனும்கதிர்
பவ, ஸம்ஸாரார்ணவமக்னுனும்ப்ரஸீதபுருஷோத்தம.

என்று ஸ்ரீ கிருஷ்ணனுக்கு [இதம் அர்க்யம்] என்று மூன்று தடவை ஸமர்ப்பிக்கவும். பிறகு நிவேதனம் செய்யவேண்டியது.

இந்தமாதிரி விஶேஷ ஆராதனத்தில் ஸமர்ப்பிக்கவேண்டிய மேல்கண்ட அர்க்யங்களை ஆராதனமெல்லாம் முடிந்து நிவேதனத்துக்கு முன் செய்யவேண்டியது.

ஏகாதஶி உபவாஸக்ரமம்

ஏகாதஶ்யாம் நிராஹாரஃ ஶ்வோபூதேமதுஸூதந
போக்ஷ்யாமி புண்டரீகாக்ஷஶரணம் மேபயாச்யுத

துவாதசியில் வ்ரத ஸமாபநம்

அக்ஞானதிமிராந்தஸ்ய வ்ருதேநாநேநகேஶவ
ப்ரஸீதஸுமுகோநாத க்ஞானத்ருஷ்டி ப்ரதோபவ.
அனேக பவஸம்ஸித்த பாபப்ரக்ரதிதம்மனஃ
க்ஞான தீபாஸ்ததிமிரம் வ்ருதேநகுருமேநக.

ஒருவஸ்து எம்பெருமானுக்கு அவஶ்யம்வேண் டியிருந்து அவைகள் யாதாமொருவரிடத்தில் வாங்க வேண்டியதாயிருந்தால் "தானம்தததப்ரீயைர் யுக் தைரச்யுதப்ரீய தாமிதி" என்கிற படியே கொடுப்ப வனும் வாங்குபவனும் [அச்யுதப்ரீயதாம்] என்று சொல்லவேணும்.

4-வது பக்கத்தில் ஶோக்ஷண தாஹன பிலா வன விஷயங்களில் வட்டில்களை யம் வாயவேநமஃ என்று வலது கையினால் காட்டி வாயுவினால் உலர்த்துவது ஶோஷணமென்றும், ரம் அக்னேயநமஃ என்று வலது கையினால் காட்டி அக்கினியினால் கொளுத்துவது தாஹன மென்றும், வம் அமிருதாய நமஃ என்று இடது கையினால் காட்டி அமிருதத்தினால் உத்கிருஷ்டமாக்குவது ப்லாவனமென்றும் சொல்லப்படும்.

பூமகள்விலாச அச்சுக்கூடம் சென்னை: - 1935.

வடகலை ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்

தேசிகன் ஸ்தோத்ரபாடம்	0	12	0
ஷ்டி நாகர எழுத்து	1	0	0
தேசிகப்பிரபந்தம்	0	8	0
கோபாலதேசிக ஆந்நிகம்	0	5	0
ஆன்னிக ஸாங்க்ரஹம்	0	3	0
பகவதாராதந கிரமம் (மடம்)	0	2	0
ஸ்ரீ ஸந்நிதி ஆன்னிகம் (கிரந்தம்)	0	12	0
திருவாராதன க்ரமம்	0	3	0
ந்யாஸோல்லாஸம்	0	2	0
ஸத்ஸம்ப்ரதாய ஹ்ருதயம்	0	3	0
ஸந்தியாவந்தந பாஷ்யம்	0	12	0
நித்யம்	0	12	0
வேதசாத்துமறை	0	2	0
யஜுஸந்தியாவந்தநம் (தமிழ்)	0	2	0
சாமஸந்தியாவந்தநம் ,,	0	2	0
அமாவாசை தர்ப்பணம் ,,	0	2	0
ஸாரஸாரம் ,,	0	3	0
புருஷஸூக்தம் முதலியன ,,	0	2	0
ஸ்ரீஸூக்தம் முதலியன ,,	0	1	0
ரகுவீரகத்யம் முதலியன ,,	0	1	0

விலாசம்:

பட்டாபிராமன் கம்பெனி,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தாலயம்

நெ. 183, தங்கசாலை வீதி, மதராஸ்.